**செய்தி வெளியீடு எண்: 680** **நாள்: 20.09.2018**

**காவல் நிறைவாழ்வு பயிற்சி துவக்க விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள்**
**ஆற்றிய உரை –20.9.2018**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி.

தமிழ்நாட்டு மக்களுக்கு அரணாக விளங்குவது
தமிழ்நாடு காவல்துறை. இத்துறையை மேலும்
செம்மைப்படுத்தி, அதன் சிறந்த செயல்பாட்டிற்கு
மேலும் ஊக்கம் அளித்திடும் நோக்கில்,
இந்த "**நிறை வாழ்வு பயிற்சி**"
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்
துவக்க விழாவில் கலந்து கொள்வதில்
நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள
மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன்
**திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர்
**திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர்
**திரு. பி.தங்கமணி அவர்களே!**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் சகோதரர்
**திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும்
நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன்
**திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
**திரு. கே.பி.அன்பழகன் அவர்களே!**

தலைமைச்செயலாளர் மரியாதைக்குரிய
**முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!**

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
கூடுதல் முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய
**திரு. நிரஞ்ஜன் மார்டி அவர்களே!**

காவல் துறை தலைமை இயக்குநர் மரியாதைக்குரிய
**திரு. டி.கே.ராஜேந்திரன் அவர்களே!**

தமிழ்நாடு காவல் துறையுடன் இணைந்து
இந்த நிறைவாழ்வு பயிற்சியை செயல்படுத்த இருக்கும்
“**நிம்ஹான்ஸ்**” என்று அழைக்கப்படும்,
தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல்
நிறுவனத்தின் இயக்குநர்
மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பேராசிரியர் **கங்காதர் அவர்களே!**

மற்றும் இந்நிறுவனத்தின் **பதிவாளர்** அவர்களே!
**பேராசிரியர்களே!**

இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள அனைத்து
அரசு மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகளே!

காவலர்களே! மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம் !

நமது காவல் துறை எல்லா காலங்களிலும்
சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதிலும்,
குறிப்பாக, நெருக்கடியான தருணங்களில்,
சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும்,
பொது ஒழுங்கை சிறப்பாக பேணி பாதுகாக்கும் துறையாக
விளங்கி வருகின்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின்
தாரக மந்திரமான ‘**அமைதி, வளம், வளர்ச்சி**’–க்கு
ஆணிவேராக இருப்பது ‘**அமைதி**’ என்ற
முதல் மந்திரம். இதனை நிலைநாட்ட
திறமையான காவல் துறை இன்றியமையாதது.
இதுதான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும்,
மேம்பாட்டிற்கும் அடித்தளமாகும்.

ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி
ஏற்பட வேண்டுமெனில் அங்கு அமைதி
நிலவ வேண்டும். இப்பணியினைத்தான்
நமது காவல் துறையினர் சிறப்பாக செய்து,
தமிழ்நாட்டை ஒரு அமைதிப் பூங்காவாக
திகழச் செய்கின்றனர் என்று
இத்தருணத்தில் பெருமையுடன்
கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
காவல் துறையின் மீது நன்மதிப்பும், நம்பிக்கையும்
வைத்திருந்தார்கள். அவர்களின் நலனுக்கு
பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
காவல் துறையின் பணிகளை ராணுவத்திற்கு
இணையாக பாராட்டி பேசியிருக்கிறார்கள்.

காவல் துறையினர் தங்கள் உயிரை பணயம் வைத்து
சமூக விரோதிகளை சண்டையிட்டு
வீழ்த்தியிருக்கிறார்கள். தீவிரவாதிகளின்
நடமாட்டத்தினை தமிழ்நாட்டில்
முழுவதுமாக கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

சட்டம் ஒழுங்கு பாதுகாப்பதை திறம்பட
செய்து வந்தாலும்,
**குற்றங்கள் நடைபெறாமல் தடுத்தல்,**
**குற்றங்களை கண்டுபிடித்தல்,**
**போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல்,**
**முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்,**
**முக்கியமான அமைப்புகளுக்கு பாதுகாப்பு வழங்குதல்,**
**இயற்கை சீற்றங்களை சமாளித்தல்,**
**பல்வேறு சமூக சட்ட விதிகளை செயல்படுத்துதல்**
போன்ற விரிவான பணிகளை
நீங்கள் செய்து வருகின்றீர்கள்.

நீங்கள் பணி செய்யும்போது,
சில சமயங்களில், ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாவதை
நாங்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஆனால் நீங்கள்,
‘**என் கடன் பணி செய்து கிடப்பதே**’
என்ற ஆன்றோரின் வாக்குப்படி
அமைதியுடன் பணியாற்றி வருகிறீர்கள்.
இதை மக்களும் கவனித்துக் கொண்டு தான்
இருக்கிறார்கள். சென்ற வருடம் பெய்த
பெருமழையின் போது காவல் துறையினர்
குழுக்களாக செயல்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு
பல வகையில் உதவி புரிந்துள்ளனர்.

உதாரணமாக, சென்னை பெருமழையின் போது,
சாலையில் தேங்கியிருந்த நீர் வடியும் பொருட்டு,
ஒரு காவல் ஆய்வாளர் மழைநீர் வடிகாலில்
இறங்கி அடைப்புகளை நீக்கியது,

தாய் தந்தையை இழந்த ஒரு மாணவனை,
தத்தெடுத்த ஒரு காவல் உதவி ஆணையர்,

72 வயதான ஒரு முதியவர்,

பல ஆண்டுகளுக்குப் பிறகு
அவரது பேரனைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தல்
போன்ற உங்களின் பல்வேறு
மனித நேயப் பணிகளை
பத்திரிகை மற்றும் சமூக வலைதளங்கள் மூலம்,
மக்களும், நாங்களும் பார்த்து பாராட்டிக் கொண்டு இருக்கின்றோம்.

இது போன்ற எண்ணற்ற மக்கள் நலப் பணிகளை
அரசு நிர்வாகத்துடன் இணைந்து
நீங்கள் ஆற்றியுள்ளீர்கள்.

சமுதாயத்தில் அநீதி இழைக்கப்பட்ட மக்கள்,
நியாயம் கோரி காவல் நிலையங்களுக்கு
வரும்பொழுது, அவர்களை மனித நேயத்தோடு
அணுகி, அன்பாக பேசி,
அவர்களின் குறைகளை கேட்டறிந்து,
குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி
தண்டனை வாங்கித் தரும்போது
உங்கள் பணியை நினைத்து நீங்கள்
பெருமைப்பட்டு கொள்ள வேண்டும்.

அதனை எண்ணி நாங்களும்
பெருமைப்படுகின்றோம். காவல் துறையின்
இப்பணிகளால் சட்டத்தின் மீதும், அரசின் மீதும்
மக்களுக்கு நம்பிக்கையும், மரியாதையும் ஏற்படுகிறது.

**“மக்களுக்கு – நீ தேவைப்படுகிறாய்.**
**மக்களுக்கு நீ நெருக்கமாய் உள்ளாய்**
**என்ற உணர்வே இன்பங்களில் தலையானது.**
**மகிழ்ச்சிகளில் நிலையானது”**
என்றார் **மாக்ஸிம் கார்க்கி** என்ற
மேலை நாட்டு அறிஞர் ஒருவர்.

இந்த பொன்மொழி காவல் துறையினரின்
பணிக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.
வெயில், மழை, குளிர் என்ற இயற்கை
சீற்றங்களின் இடையே காவலர்கள்
பணியாற்றி வருகிறார்கள். இதன் காரணமாக,
சில நேரங்களில் அவர்கள் உணவைக் கூட
சரியான நேரத்தில் எடுத்துக் கொள்ள முடியாமல்
போகிறது. பணியின் தன்மையினால்,
குடும்பத்தினருடன் நேரம் செலவிட முடியாத
சூழ்நிலையும் ஏற்படுகிறது.

இதன் மூலம் காவல் துறையினரும்,

அவர்தம் குடும்பத்தினரும் சில நேரங்களில்
மனஅழுத்தத்திற்கு ஆளாக நேரிடுகிறது.
காவல் துறையினர் சந்திக்கும் பிரச்சனைகளை
இந்த அரசு நன்கு அறியும்.

எனவே தான், காவலர்கள் நலன் மற்றும்
துறை ரீதியான நலன் ஆகியவை குறித்து
மாண்புமிகு அம்மாவின் அரசு
மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
தான் நடித்த திரைப்படங்களில்
காவல் துறையின் சிறப்பினை
தனது கதாபாத்திரங்களின் மூலம்
நன்கு வெளிப்படுத்தியுள்ளார்கள்.
அப்போதிருந்தே, இளைஞர்கள்
காவல் துறையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும்
என்ற உந்துதலை அவர் ஏற்படுத்தினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் ஆட்சியிலும், அவர்களை தொடர்ந்து
மாண்புமிகு அம்மாவின் அரசினாலும்,
காவல் துறையினர் நலனுக்காக பல்வேறு
நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே
குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- காவல் துறையினருக்கென தனியாக ஒரு வீட்டுவசதி கழகத்தை தோற்றுவித்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். பின்னர் மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை விரிவாக்கம் செய்தார்.

- **“உங்கள் சொந்த இல்லம்”** திட்டத்தின் மூலம் காவலர்களுக்கு சொந்தமாக வீடு பெறுவதற்கு ஏற்பாடு செய்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

- தமிழக காவல் துறையினருக்கென தமிழ்நாடு முழுவதும் 50 இடங்களில் பல்பொருள் காவல் அங்காடிகள் நிறுவப்பட்டு, மலிவு விலையில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- 40 வயது நிரம்பிய காவலர்களுக்கு இதுவரையிலும் ஆண்டிற்கு ஒரு முறை இலவச முழு உடல் பரிசோதனை நடத்துவதற்கு இவ்வரசு ஆணையிட்டிருந்தது. தற்போது 30 வயது நிரம்பிய காவலர்கள் கூட அப்பயனை பெறுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, 20.8.2018 அன்று

ஆணை பிறப்பித்துள்ளது என்பதனை இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

- காவல் துறையினரின் பணிச்சுமையினை குறைப்பதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த 7 ஆண்டுகளில்,
  100 காவல் துணை கண்காணிப்பாளர்களும்,
  1,112 சார்பு ஆய்வாளர்களும்,
  32,905 இரண்டாம் நிலை காவலர்களும் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். காலிப் பணியிடங்களும் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன.

- இவ்வரசின் கடந்த ஏழு ஆண்டு கால ஆட்சியில் மறைந்த 1,232 காவல் துறையினரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

- அதேபோல், பணியின்போது பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 1,461 காவலர்களின் குடும்பங்களுக்கு 42.45 கோடி ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் 36 புற நோயாளிகள் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

- அனைத்து காவல் துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் பயன் பெறும் வகையில் ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- காவலர் நலனுக்காக 10 கோடி ரூபாய் செலவில் சமுதாய கூடம் கட்டுவதற்காக சென்னை ஆவடியில் 4.6.2018 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற எண்ணற்ற நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

காவலர்கள், தங்கள் பணியின் தன்மையால்,
மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவது இயற்கை.
காவலர்கள் தங்கள் பணிகளை தொய்வின்றி செய்ய,
அவர்கள் குடும்பத்தாரின் ஒத்துழைப்பு
இருந்தால் தான், காவல் துறையினர் மன நிறைவுடன்
நாட்டுப் பணியை ஆற்ற முடியும்.

அதே போல், காவல் துறையினரும் தங்கள்
குடும்பத்தாரோடு போதுமான நேரம் செலவழிக்க
வேண்டும். இதன் மூலம் நல்ல ஆரோக்கியமான
சூழ்நிலை காவல் துறையினரின் குடும்பங்களிலும்,
அவர் பணியாற்றும் இடங்களிலும் நிலவுவதற்கு

வழிவகை ஏற்படும்.

எனவே, காவல் துறையினரின் மனநலன் மற்றும்
குடும்ப நலன் ஆகியவற்றை பேணி பாதுகாப்பதற்காக
மிகுந்த பரிசீலனைக்குப் பின்பு,
தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டதே இந்த
ஏற்றமிகு ‘‘**காவலர் நிறைவாழ்வு பயிற்சி**’’ திட்டம்.
இந்த திட்டம் பெங்களூரில் உள்ள,
உலகத்தரம் வாய்ந்த ‘‘**நிம்ஹான்ஸ்**’’
என அழைக்கப்படும் தேசிய மனநலம்
மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன்
இணைந்து தமிழ்நாடு அரசால்,
தமிழக காவல் துறையினர் மற்றும்
அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும்
பயிற்சி ஆகும்.

இந்தியாவிலேயே, ராணுவத்திலோ
அல்லது துணை ராணுவத்திலோ கூட
இம்மாதிரியான பயிற்சி இது வரை
அளிக்கப்படவில்லை. காவல் துறையின்
உயர் அதிகாரி முதல் கடைநிலை காவலர்
வரை அனைவருக்கும் இம்மாதிரியான
பயிற்சி வழங்கவிருப்பது இந்தியாவிலேயே
தமிழ்நாட்டில் மட்டும் தான் என்பதை
இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அனைத்து மாவட்டம் மற்றும் காவல் பிரிவுகளிலும்,
சிறப்புப் பிரிவுகளிலும் பணியாற்றும் அனைத்து
காவலர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும்
இந்த நிறைவாழ்வு பயிற்சி அளிக்கப்படும்.
இதற்கென, காவல் துறையின்
அனைத்து மாவட்டங்களிலிருந்தும்,
358 முதன்மை பயிற்சியாளர்கள் உருவாக்கப்பட்டு,
அவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள
காவல் துறையினருக்கு பயிற்சி அளிப்பார்கள்.

அடுத்த ஒரு வருட காலத்திற்கு
இந்த பயிற்சி அளிக்கப்படும். பின்னர்,
முதன்மைப் பயிற்சியாளர்கள் மூலம் 2 வருட
காலங்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்.

அதிக அளவு மன அழுத்தம் உள்ளோருக்கு,
தனியாக நிறை வாழ்வு பயிற்சி அளிக்கப்படும்.

அனைத்து முதன்மை பயிற்சியாளர்களுக்கும்
ஆற்றுப்படுத்துதலில் ஒரு பட்டயச் சான்றிதழ்

(Diploma Certificate) வழங்கப்படும்.

காவல் துறையினர் பணிபுரியும் இடம் மற்றும்
அவர்களின் குடும்பங்களில்
நல்ல சூழல் நிலவுவதற்காக, கடைபிடிக்கப்பட
வேண்டிய சில ஆலோசனைகளை இங்கே உங்களுக்கு
தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்'**
என்ற பழமொழிக்கேற்ப காவல் துறையினர்
தங்களது உடல்நலனில் அக்கறை செலுத்த வேண்டும்.
உடற்பயிற்சி, நடை பயிற்சி, தியானம் போன்ற
பயிற்சிகள் செய்து உடலை ஆரோக்கியத்துடன்
வைத்துக் கொள்ள வேண்டும்.
உடற்பயிற்சி செய்து விட்டு ஓய்வு எடுக்கும்போது
நமது உடலில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படும்.

- ❖ தங்கள் பலவீனங்களை பலங்களாக மாற்றிய மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை படியுங்கள். நல்ல புத்தகங்கள் படிப்பதையும், ஊக்கமூட்டும் உரைகள் கேட்பதையும் ஒரு அன்றாட பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

- ❖ எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பாராமல் உங்களது நேரத்திலோ அல்லது பணத்திலோ ஒரு பகுதியை ஒழுங்கான திட்டமிட்ட முறையில் ஏதாவது தர்ம காரியங்களுக்கு அர்ப்பணியுங்கள்

- ❖ தீய ஆதிக்கங்களிலிருந்து விலகி இருங்கள். நண்பர்களின் அன்புத் தொல்லைக்கு இடம் கொடுத்து விடாதீர்கள்.

- ❖ மனமார்ந்த பாராட்டுதல்களை கனிவுடன் கொடுப்பதற்கும், பெறுவதற்கும் பயிலுங்கள்

- ❖ உங்களது செயல்களுக்கும், நடத்தைக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள தொடங்குங்கள்.

- ❖ அசௌகரியமாக இருக்கும் பட்சத்தில் கூட சுய கட்டுப்பாட்டை தவறாது கடைபிடியுங்கள்

- ❖ உயர்ந்த ஒழுக்க பண்புகள் உடையவர்களோடு பழகுங்கள்.
- ❖ படைப்பாற்றல் உள்ளவராக இருந்து உங்களது பலவீனங்களை உங்களது பலங்களாக மாற்றும் வழியை கண்டு பிடியுங்கள்.

- ❖ பொறுமையுடன் இருங்கள். பலன்கள் கண்ணுக்கு புலப்படாத போதிலும் தொடர்ந்து செயலாற்றுங்கள்.

அமைதியையும், ஆரோக்கியத்தையும்,
ஆனந்தத்தையும் காவலர்களிடையே
ஏற்படுத்தும் வகையில், இந்த நிறைவாழ்வு
பயிற்சியை நடத்துவதற்காக
இவ்வாண்டிற்கு மட்டும் 10 கோடி ரூபாய்
மாண்புமிகு அம்மாவின் அரசால் ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பயிற்சியானது தமிழ்நாடு காவல் துறையில்
அனைத்து நிலைகளிலும் பணிபுரியும்
சுமார் 1,20,000 காவல் அலுவலர்கள் மற்றும்
அவர்களைச் சார்ந்துள்ள சுமார் 3,60,000
குடும்ப உறுப்பினர்களுக்கும்
ஓர் ஆண்டுக்குள் வழங்கப்பட உள்ளது.

காவல் துறையினரும் அவரது குடும்பத்தினரும்
இந்த பயிற்சியினை நல்ல முறையில்
பயன்படுத்திக் கொள்ளுமாறு
அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறைவாழ்வு பயிற்சியின் வாயிலாக,
தமிழக காவல் துறையினர் மற்றும்
அவர்தம் குடும்பத்தினரின்
மனநலன் மேம்படுத்தப்பட்டு,
காவலர்கள் அவர்தம் பணிகளை
மேலும் புத்துணர்ச்சியுடனும், சிறப்புடனும்
செயல்பட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இதேபோல் காவலர்களின் குடும்பங்களிலும்
நல்ல அமைதியான சூழ்நிலை உருவாகும்.

**தனிமனித அமைதி,**
**குடும்ப அமைதியாக மாறும்;**

**குடும்ப அமைதி,**
**மாநில அமைதியாக மாறும்;**

**மாநில அமைதி,**
**நாட்டு அமைதியாக மாறும்;**

**ஒரு நாட்டின் அமைதி,**
**உலக அமைதியாக மாறும்.**

**“நன்றே செய், அதையும் இன்றே செய்.**
**அதுவும் இப்போதே செய்”**
என்பது நமது ஆன்றோர் வாக்கு.

இந்த நிறைவாழ்வு பயிற்சியானது,
பலமுறை ஆய்வு செய்யப்பட்டு,
பின்னர் வடிவமைக்கப்பட்ட
பல நிலைகளைக் கொண்ட பயிற்சியாகும்.

இந்த நிறைவாழ்வு பயிற்சி உங்களுக்கு
வாழ்விலும், பணியிலும், மன நிம்மதியையும்,
ஆரோக்கியத்தையும் வழங்கும் என நம்புகிறேன்.

சாதிக்க நினைப்பவர்கள்,
எந்தத் தடைகள் வந்தாலும்
அதனை உடைந்தெறிந்து
தனது பணிகளை வெற்றிகரமாக
செய்து முடிப்பார்கள்.

காவல் துறையை சார்ந்த நீங்கள்
சாதிக்க பிறந்தவர்கள்.
ஆகவே, உங்களுக்கு தடைகள் பல வரினும்,
அதனை உடைத்தெறிந்து,
உங்களுக்கு இடப்பட்ட பணியினை
வெற்றிகரமாக நிறைவேற்றுங்கள்
என உங்களை அன்புடன் இந்த தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் நடக்கும்
மாண்புமிகு அம்மாவின் அரசு,
காவலர்களுக்கு முழு சுதந்திரம் வழங்கியுள்ளது.
அவர்களின் பணிகளில் குறுக்கீடு செய்வதில்லை.

அதனால் தான் இன்று தமிழ்நாட்டில்
சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது.

அதனால் தான், தமிழக காவல் துறையானது,
தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி,
சிறப்பாக செயல்பட்டு உலக மற்றும் தேசிய அளவில்
தனித்துவம் பெற்று விளங்குகிறது.

புலனாய்விலும், குற்றங்களை கட்டுப்படுத்துவதிலும்,
உள்நாட்டு பாதுகாப்பிலும்
நமது காவல் துறை
மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக
சிறப்புத் தன்மையுடன் பீடுநடை போட்டு வருகிறது.

இச்சிறப்பு மிக்க காவல் துறை
மேலும் சிறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள
இப்பயிற்சி சிறப்பாக நடைபெற
எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த
அனைத்து நல்ல உள்ளங்களுக்கும்
எனது உளங்கனிந்த நன்றியினை
தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!
வளர்க புரட்சித் தலைவரின் புகழ்!
ஓங்குக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ்!
எனக் கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.
நன்றி! வணக்கம்!

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**